**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**TIRUVANNAMALAI.**

**MCOP No.282 /2022**

**12.11.2025 ம.சா.1 மீனாட்சி க/பெ. சிவராமன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. 29.04.2022 அன்று அதிகாலை 1.30 மணிக்கு விபத்து புனேவில் நடந்தது. விபத்தின்போது என் கணவர் லாரியை ஓட்டி சென்றார். அந்த லாரியின் உரிமையாளர் என் கணவர் சிவராமன்தான். விபத்தின் போது லாரி காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அந்த விபத்தில் இறந்த என் கணவரின் தனிப்பட்ட காப்பீடு மற்றும் வாகன சேதாரங்களுக்கான இழப்பீடை லாரியின் காப்பீடு நிறுவனத்திடம் பெற்றுக்கொண்டேன். நான் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில் விபத்துக்கு காரணம் சாலை பராமரிக்கும் ஒப்பந்ததாரர்தான் என்று உள்ளது என்றால் இல்லை.

பராமரிப்பு ஒப்பந்ததாரர்கள் சரியாக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. அது ஒரு தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். என் கணவர் ஓட்டிசென்ற லாரி சாலையின் நடுவில் இருந்த கால்வாயில் விழுந்ததால்தான் அதன் பின்னால் வந்த கண்டெயினர் லாரி என் கணவர் ஓட்டிய லாரி மீது மோதியது என்றால் சரியல்ல. என் கணவர் மாதம் ரூ.2,00,000/- சம்பாதித்தார் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

வருமான வரி செலுத்தியதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். என் கணவரின் வருமானத்தை காண்பிக்கக்கூடிய ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 5, 6 மனுதாரர்கள் என் மாமியார் மற்றும் மாமனார். என் மாமியாரும் என் மாமனாரும் தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என்னுடன்தான் இருக்கிறார்கள்.

என் கணவரின் உடன் பிறந்தவர்கள் இருவர். ஒரு தம்பி, ஒரு தங்கை. என் மாமனாரும் என் மாமியாரும் என் கணவரின் வருமானத்தை நம்பி இருந்ததில்லை என்றால் சரியல்ல. என் கணவர் இறந்ததற்கான இழப்பீடை அவர் லாரியின் காப்பீட்டாளரிடம் நான் பெற்றுவிட்டதால் 2ம் எதிர்மனுதாரிடம் இருந்த நான் எந்த இழப்பீடும் கோர முடியாது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் நான் இழப்பீடு கோர வேண்டும் என்றால் நெடுஞ்சாலையை பராமரித்த ஒப்பந்ததாரர்களிடம்தான் கேட்க வேண்டும் என்றால் சரியல்ல. சாலை பராமரிப்பு ஒப்பந்ததாரர்களை இவ்வழக்கில்

சேர்க்காததால் 2ம் எதிர்மனுதாரரை பொருத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.